1974 சனவரி 21]

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : நான் சற்று முன்னாலே கூறியபடி இந்தியன் வங்கியிலே கடன் உதவிபெற்றுக் தான் இந்த ஹாஸ்டலும் கட்டப்படுகிற செயற்குறிப்பு இருக்கிறது. கடன் உதவி பெற்றவுடன் இதுவும் கட்டுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும்.

*** 41 வினா—திரு. நா. வெ. குருசாமி :** *மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மதுரை மாவட்டம், ரெங்கசமுத்திரம் உயர்நிலைப் பள்ளிக்கு நலத்துறை மூலமாக ஹாஸ்டல் ஏற்படுத்த வேண்டும் என்ற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்பொழுது முதல்?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: *(அ) & (இ) மதுரை மாவட்டம், ரெங்கசமுத்திரத்தில் ஒரு தாழ்த்தப்பட்டோர் அரசினர் மாணவர் இல்லம் கல்வி ஆண்டு 1973-74-ல் துவக்க ஏற்கெனவே ஆணை விடுக்கப்பட்டுள்ளது.*

குடகனாறு திட்டம்

* 42 வினா—**திரு. வா. மை. அப்துல் ஜப்பார்,**
திரு. என். கிட்டப்பா,
திரு. பெ. சௌந்தரபாண்டியன், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடகனாறு திட்டத்தில் ஆக்கப்பணிகள் தொடங்கி விட்டனவா ?

(இ) அரவக்குறிச்சி தொகுதி ஆண்டிப்பட்டி மஞ்சைவெளி கிராமப் பகுதிக்கு இத்திட்டத்திலிருந்து பாசன வசதி செய்து தர உத்தேசிக்கப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: *(அ) ஆம்.*

(இ) குடகனாறுத் திட்டத்தினால் அரவங்குறிச்சித் தொகுதியில் பெரிய மஞ்சுவெளி கிராமம் மட்டும்தான் பயனடையும். ஆண்டிப்பட்டிக் கிராமம் இத்திட்டத்தினால் பயனடையாது.